UNIVERSITY OF JAFFNA, SRI L
RECEIVED
17-12-1986

விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 2 ரு: ஆகிர் 14 இதழ் 309

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17 12 1986

## தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு 3 அரசியல்கட்சிகள் கோரிக்கை

### பொதுத்தேர்தலை நடத்தவும் வலியுறுத்து

கொழும்பு, செவ்- தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைக்கும்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவை இணைந்த முக்கூட்டு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

82ம் ஆண்டில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புப் பற்றிய தேர்தல் ஆணையாளரின் அறிக்கையை ஆதாரமாக வைத்தே இம்முன்னணி தனது கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்தச் சர்வஜன வாக்கெடுப்பின்போது மோசடி, ஊழல்,

(5-ம் பக்கம் பார்க்க)

## இந்தியகுழு இன்று கொழும்பு விஜயம்

(கொழும்பு)

இந்திய மத்தியஆணையமைச்சர்களான திரு சிதம்பரம் திரு நட்வர்சிங், இந்திய வெளியுறவுச்செயலர் திரு. வெங்கடேஸ்வரன். அரசியலமைப்பு நிபுணர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர்கொண்ட

(8ம் பக்கம் பார்க்க)

● தலவாக்கொல்லையில்

## தமிழர் - சிங்களவர் பங்குபற்றிய கிரிக்கெட் போட்டியில் கலவரம்:

### 25 பேர் காயம்; வாகனங்கள் சேதம்

[நுவரெலியா செவ்] தலவாக்கொல்லையிலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள நாகசேனை என்னும் இடத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் - சிங்கள இனத்தவர் பங்குபற்றிய கிரிக்கெட் போட்டியில் ஏற்பட்ட குழப்பத்தின் போது சுமார் 25 பேர் வரை காயமடைந்தனர்.

இக்கிரிக்கெட் போட்டியில் தமிழ்கோஷ்டி வெற்றி பெறும் தறுவாயில் அங்கிருந்த சிங்களவர் தமிழ் கோஷ்டிமீது கற்களை வீசித் தாக்கியமையடுத்தே கலகம் விளைந்தது.

தமிழர் மீதான இத் தாக்குதலில் சிங்களகடை முதலாளியொருவரும் முன்னணியில் நின்றுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த

(5ம் பக்கம் பார்க்க)

● சேதங்களை பார்வையிட

# கல்முனை வந்த மந்திரி முகமட்:

# மக்கள் சந்திக்காது திரும்பினர்

## நகரில் நேற்று பூரண ஹர்த்தால்

[நமது நிருபர்]

**கல்முனையில் கமாண்டோக்கள் மேற்கொண்ட தாக்குதல்களின்போது பாதிப்படைந்த மக்களையும் சேதமாக்கப்பட்ட முஸ்லிம் தமிழ் மக்களுக்குச் சொந்தமான உடைமைகளையும் நேரில் பார்வையிட நேற்றுக்காலை இப்பகுதிக்கு வந்த போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம. எச். முகமட், பாதிக்கப்பட்ட முஸ்லிம் தமிழ் மக்களைச் சந்திக்கமுடியாமல் ஏமாற்றத்துடன் உடனடியாக கொழும்பு திரும்பினர்.**

**இதேவேளை நேற்று கல்முனையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.**

கமாண்டோக்களினால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய பொருள் நஷ்டம், உயிர் நஷ்டங்களை நினைவு கூர்ந்து ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக கல்முனை முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் கூட்டாக நேற்று பரிபூரண ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

அதேசமயம் அமைச்சர் அல்

(5ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுடனும் ஆலோசித்தே முடிவெடுக்கப்படும்

கொழும்பு, செவ் "இலங்கையின் இனப் பிரச்சினைக்குக் காணப்படும் எந்தமுடிவும் முஸ்லிம் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்தபின்பே எடுக்கப்படும் என ஜனாதிபதி ஜெயவர்த்தன என்னிடம் உறுதியளித்துள்ளார்."

இவ்வாறு கலாநிதி பதியூதின் மொஹமட 'ஈழநாடு'-க்கு அளித்த விசேட பேட்டியின்

(5ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany
★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND] விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A 3350]

ஆயுதங்களைக் கண்டெடுப்போர்

## எமது முகாமுடன் தொடர்புகொள்ளவும்

### 'கிட்டு' வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன் "அநாதரவாகக் கிடந்த ஆயுதங்களை கண்டெடுத்தோர் அல்லது வைத்திருப்போர் உடனடியாக எமது முகாமுடன் தொடர்புகொண்டு ஒப்படைக்கவும்"

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் குடாநாட்டுத் தளபதி திரு கிட்டு விடுத்துள்ள வேண்டுகோளில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத் தடை செய்யும் நோக்கமாக, எம்மால் மேற்கொண்ட நடவடிக்கையின் போது முகாம்களிலிருந்து தப்பிச்சென்றவர்கள் தங்கள் துப்பாக்கிகளையும், கிரனேட்டுகளையும் மறைவான இடங்களில் விட்டுத் தலைமறைவாகிவிட்டார்கள்.

அநாதரவாகக் கிடக்கும் அந்த ஆயுதங்கள் பொதுமக்களின் சொத்துக்களை

(5ம் பக்கம் பார்க்க)

## கதிரவெளி அகதி முகாமில் கைதானோரில் 98 பேர் விடுதலை

### 7 பேர் பற்றிய தகவலில்லை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளி அகதி முகாமிலிருந்து ஆயுதப்படையினர். கைதுசெய்து விசாரணைக்காகக் கொண்டு சென்ற 105 பேரில் 7 பேர் தவிர மீதிப்பேர் விடுவிக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

## விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், புதன் தமிழீழ விடுதலைப்புலிகளின் குருநகர் பிரதேசப் பொறுப்பாளர் தேவதாஸ் நேற்றுக் காலை நிகழ்ந்த திடீர்விபத்தில் சிக்கி மரணமானார். (மா)

## கைதானவர்கள் மீது விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டும் சரணடைந்துமிருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ பி ஆர். எல். எவ்] யும் மக்கள் விடுதலை படையினர் மீதான விசாரணை, விடு

[5ம் பக்கம் பார்க்க]

வட்டகொடயில்

## 2 தொழிற்சங்கங்கள் மோதல்: தொழிலாளி ஒருவர் மரணம்

நுவரெலியா. செவ் வட்டகொட தோட்டத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் புதிய செங்கொடி இயக்கத்துக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துவேற்றுமை காரணமாக இடம்பெற்ற மோதல்களினால் தோட்டத் தொழிலாளி ஒருவர் மரணமானார்.

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Sony 3000 வீடியோ கமரா Record Player (Akai), Akai டெக், Akai ஸ்பூல்செற், மற்றும் அம்பிலிவயர், மின் விசிறி முதலியன 131, அரசடி றோட், கந்தர்மடம். (சரணாலயம் முன்பாக) (C 6368)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001 [C6299]

Broiler இறைச்சிக் கோழிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்றர்) 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C 6402)

Bairaha Farms புறொயிலர் குஞ்சுகள் 23ந் திகதி செவ்வாய்க்கிழமையும் Hy-line பேட்டுக்குஞ்சுகள் 6-1-1987 செவ்வாய்க்கிழமையும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க: சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 6400)

நல்ல பராமரிப்பிலுள்ள 100 லவ்பேர்ட்ஸ் (கூட்டுடனும்), பொமேரியன் நாய்க்குட்டி கூட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: பரமானந்தன், 18/A, சிவகுருநாதர் வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம். (C 6380)

4 ஏக்கர் தென்னை, மா, பலா, கொய்யா மற்றும் பயன் தரும் மரங்களுடன் கல்வீடு கிணற்றுடன் வீட்டு உபயோக சாமான்களுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: P. K. M. Gannapathenathan, Kotrandar Kulam, Palnai Iyakkachchi. (C 6407)

பெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயரிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு. மகிமிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

Cockerels and Pullets சேவற் குஞ்சுகள் 17 புதன்கிழமையும், 20 சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும் விலை 5/25 Lohmann Hyline, Tegal, Golden Comets பேட்டுக் குஞ்சுகள் 20-12-86, 13-1-1987 13-2-1987 விநியோகிக்கப்படும். உடன் பதிவுசெய்யவும். Nallur Farm Centre, (நல்லூர் வீடியோ சென்றர்) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C-6372]

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, ஹொட்செற், கசற் றேடியோக்கள், Show case, Formica சாப்பாட்டு மேசைகள், வயலின், சிங்கர் தையல் மெஷின், கிளாஸ் வகைகள், Fisher டெக்; Lambrata ஸ்கூட்டர் T. V. Stand, விருந்தை கதிரைகள், கட்டில் மெத்தைகள், அல்மாரி, Steel அலமாரி Cas Cooker, புத்தக றாக்கைகள், கடை Show case மற்றும் பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். (C6360)

## விற்பனைக்கு

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள் ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ் 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 24055 [A3307]

தமிழ் ரெமிங்டன் (Portable) தட்டச்சு மற்றும் புதிய English தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) விற்பனைக்கு உண்டு; Fudo Enterprises 29/17, Power House Rd, [3 Rd Lane], Jaffna. [C 6414]

## தேவை

ஒப்பந்த அடிப்படையில் பல வேலைகளையும் செய்யும் தச்சு வேலை யந்திரம் ஆசாரியுடன் தேவை 91 ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். C 6388

மு. க. முத்துக்குமார்
சட்டத்தரணி
பருத்தித்துறை

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு கனகரத்தினம் என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

- மரணமெய்தியவர் முருகேசு கனகரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி, நெல்லியடி, கரவெட்டி
மனுதாரர்.

வழக்கு இலக்கம் மரணசாதன நியாயாதிக்கம் } 1192 Testy

எதிர்

1. கனகரத்தினம் மகள் சுமதி
பராயமடையாதவர்;
2. கனகரத்தினம் மகள் பாமதி
பராயமடையாத 2ம் எதிர்வாதிதனதுவழக்கு பாதுகாவலர் 3ம் எதிர்வாதி மூலமாக
3. பொன்னையா நாகலிங்கம் எல்லோரும் நெல்லியடி, கரவெட்டி.
எதிர்வாதிகள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் பின் முற்றுகும் கட்டளை பதிவுபட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

எனவே அக்கறை உள்ள எவரேனும் 1987ம் ஆண்டு தை மாதம் 23ம் திகதி காலை 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படக்கூடாதென்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றை தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986 மார்கழி 12ம் திகதி.
மன்றின் கட்டளைப்படி,

(ஒப்பம்)
ச. நடராசா,
பதிவாளர்.

வரைவு,
மு. க. முத்துக்குமார்,
மனுதாரின் சட்டத்தரணி
C 6384

## சேவை

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும்: பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரராசா. 174/16 கோவில் வீதி (கைலாச பிள்ளையார் கோவிலடி) நல்லூர். [C 6305]

மணமகன் மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்பட வாங்கவும் விற்கவும். திட்டப்பரிசு விரங்களுக்கும், எம்மை நாடுங்கள் புதியனவும் பழையனவுமாகும் நானாவித பொருள்கள் ஆதனங்களுட்பட மலிவு விற்பனைக்கிருக்கின்றன லக்கி பெனிபிட் கோ லிமிட்டட், சந்திக்கருகாமையில் கோப்பாய். C 6394

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை பேதுருப்பிள்ளை அல்பிரட் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

- மரணமெய்திவர் பேதுருப்பிள்ளை அல்பிரட் கைம்பெண் மேரி றெஜினா நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை.
-மனுதாரர்

இல. த/1ı2

எதிர்

1. புறுணோ நொயல் அல்பிரட் நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை தற்போது மேற்கு ஜேர்மனி.
2. அல்பிரட் யூஜின் ராஜகுமார்

பராயமற்றவர்கள்

3. அல்பிரட் ஜெயதர்ஷினி
4. அல்பிரட் அன்டரூம்பஸ் எல்லோரும் நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை பராயமற்றவர்களான 3ம், 4ம் எதிர் மனுதாரர்கள் தமதுமைத்துனரான 5ம் எதிர் மனுதாரரை வழக்குப் பாதுகாவலராக.
5. அந்தோனிப்பிள்ளை யோசேப் இல 10 ஆசீர்வாதப்பர் வீதி நல்லூர். யாழ்ப்பாணம். பராயமற்ற 3ம், 4ம் எதிர்மனுதார்களின் வழக்குப பாதுகாவலராக.

- எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தைநிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு மாசி மாதம் 11ந் திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள் எதிர்மனுதாரர்கள் மன்றில் சமுகளிக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதி. ஊர்காவற்றுறை.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சு. வ கணேசன்,
பதிவாளர்.

வரைவு;
ச. இளங்கோவன்,
மனுதார் சட்டத்தரணி.
C 6321

## சேவை

"போட்டோஸ்ரட்", 'ரோனியோ' பிரதிகளைத் தரமான காகிதத்தில் தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள: கிளீன் கட், 239. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம், தொ. பே இல: 22824. (C 3336)

## வகுப்புக்கள்

Radio T V. வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், பிளம்பிங் தட்டெழுத்து-சுருக்கெழுத்து 20-12-1986ல் ஆரம்பமாகவுள்ளன சன்றிதழ் பெறுமதியானது தொடர்பு: Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 6392

TOEFL Essay Writing பயிற்சி வகுப்புக்கள் இரு மணித்தியாலம் A/L, Exam Grammar ஆரம்பம் 20-12-86. சனி, ஞாயிறு மாலை 3-5 S B Iyar, 12, லைமன் வீதி. நல்லூர். (C 6378)

Radio T. V., Vedio, Deck செய்முறையுடன் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம் 20-12-86 அத்துடன் 1987 D c O/L, 9ம் வகுப்புக்குரிய Maths, Science 19-1 1987 ஆரம்பமாகும் விபரங்கட்கு Electro Technical Institute, கல்வளை, சண்டிலிப்பாய் (C 6338)

A/L 87 ஓட்ட மின்னியல் ஆரம்பம் 20-12 86 Sat and Sun 2 00p m ஆசிரியர் ரவீந்திரநாதன் B sc Sri-Lanka 3rd Cross Street, Jaffna P.M.C முன்பாக) (C 6415)

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் மன்னார், உப்புக்குளம் காலஞ்சென்ற நூறும்மா இபுறுகிமின் மரணசாதனமிலலாச் சொத்தின் விடயத்தில்

— மரணமெய்திடவர் மன்னார், உப்புக்குளம் இபுறுகிம் றபீக்
— மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல T/13/86

எதிர்

மன்னார் உப்புக்குளம்

1. இபுறுகிம் பகுமுத்
2. இபுறுகிம் அன்சார்
3. இபுறுகிம் ஜவுஹர்தீன்
4. இபுறுகிம் நூறிய்யா

[3-ம், 4-ம் மைனர் பிரதிவாதிகள் சார்பாக தங்களுடைய கார்டியன் 1-ம் பிரதிவாதி]

— எதிர் மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1987-ம் ஆண்டு தை மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாகப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்

நீதிமன்றக் கட்டளைப்படி,
(ஒப்பம்)
மு. பத்மநாதன்,
பதிவாளர்.

மன்னார்
4-12-1986
(C6371)

# ஏல விற்பனை

## நகரசபை வவுனியா

கீழ்க் குறிப்பிட்டுள்ள பழைய பொருட்கள் 30-12-86ல் மு ப 10 00மணிக்கு பகிரங்க ஏலத்தில் நகரசபைக் களஞ்சியத்தில் விற்கப்படும். சித்திபெற்ற கேள்விக்காரர்கள் கேள்வித்தொகை முழுவதையும் மொத்தமாக உடன் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்துதல்வேண்டும்.

பொருட்களின் விபரம்:

1. மின் யந்திர உதிரிப்பாகங்கள் (லிஸ்றர் பிளாக்ஸ்ரோன், பிளாக்ஸ்ரோன், ஆர். என்.) (புதியன)
2. மின்வடம், இரும்புக்கம்பிகள், யன்னல்கள், புதினப் பத்திரிகைகள், அங்கில் பட்டம், அலுமினியம் ஏணி, மண்வெட்டி, பிக்கான், வண்டில்கள் மற்றும் வாடி வீட்டு உபகரணங்கள்.

ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் நகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

இ. இராமலிங்கம்
செயலாளர்,

நகரசபை, வவனியா.
நகரசபை அலுவலகம்,
வவனியா. 12-12-86
[A 3337]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்–
இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்காணும் வேலைகளுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. ஆனந்தக் குமாரசுவாமி விடுதிக்கும் விஞ்ஞான பீடத்திற்கும் அருகிலுள்ள எல்லைச்சுவர் உயர்த்திக் கட்டுதல்.
2. யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவப் பகுதியில் தளபாடங்கள் வழங்குதலும் பொருத்துதலும்.

விண்ணப்பதாரர் குடிசார் வேலைகளுக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் அல்லது கட்டடத்திணைக்களத்தில் ரூ. 100,000/-க்கு பதிவு செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் இவற்றிற்கான ஒவ்வொரு கேள்விகளையும் விண்ணப்பங்களையும் ரூபா 50/- கட்டணமாக செலுத்தி 24-12-86ந் திகதிக்கு முன் வேலைப்பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித்திகதி 02-01-87 முற்பகல் 10 மணி ஆகும்.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபை ஏதாவதொரு அல்லது சகல விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் உரிமையுடையது.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.
[A 3325]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப் பிரச்னைக்கு தீர்வுகாண: "இணக்கமான திட்டங்களை அரசு முன்வைக்கவேண்டும்" —டிக்ஸிட்

புதுடில்லி, டிச. 16

"இனப்பிரச்னைக்கு தீர்வகாணும் வகையில் இலங்கை அரசு மேலும் இணக்கமான திட்டங்களை முன்வைக்கவேண்டும்" என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என். டிக்ஸிட் ஜனாதிபதி ஜெயவர்தனாவிடம் இந்திய தரப்பில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்த இணக்கமான யோசனைகள் தமிழர்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வாக அமைவதோடு இலங்கையின் ஒருமைப்பாட்டையும் பாதிக்காது இருக்கவேண்டுமென்றும் திரு. டிக்ஸிட் மேலும் கூறியுள்ளார்.

இதனடிப்படையிலேயே இந்திய இணை அமைச்சர்களின் இலங்கையுடனான பேச்சுக்கள் அமையுமென்று புதுடில்லியில் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

'பிரச்னைக்கு நடைமுறை சாத்தியமான திட்டங்கள் முன்வைக்கப்படும்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா டிக்ஸிட்டிடம் உறுதியளித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை இனப்பிரச்னை தீர்வுக்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு இந்திய இணையமைச்சர்கள் சென்னையில் போராளிகளுடன் மேற்கொண்ட பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்று சென்னைத்தகவலும், ஓரளவு திருப்தியளித்திருப்பதாக புதுடில்லி தகவலும் தெரிவிக்கின்றன.

போராளிகளுடன் மேற்கொண்ட பேச்சுகள் குறித்து இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியிடம் இணையமைச்சர்கள் இருவரும் இன்று எடுத்துரைப்பார்கள்.

மேற்படி சென்னைப்பேச்சுக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையில நடைபெற்றது. இப்பேச்சுக்களில், இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் எவ்வித மாற்ற நடவடிக்கைகளும் அமையக்கூடாதென்று போராளிகள் குழுக்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகள் குறித்து தனி மாகாணசபை அமைப்பது என்ற இலங்கை அரசின் ஆலோசனைகளை போராளிகள் குழுக்கள் அனைத்தும் நிராகரித்தன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கும் இலங்கை அரசின் மற்றொரு மாற்றுத்திட்டத்தையும் போராளிகள் குழுக்கள் அனைத்தும் நிராகரித்தன.

பிரதமர் காந்தியின் ஆலோசனைகளுடன் இலங்கை செல்லவுள்ள மேற்படி இரு அமைச்சர்களுடன் இந்தியவெளியுறவு செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனும், மத்திய உள்துறை சட்ட ஆலோசகர் திரு. எஸ். பாலகிருஷ்ணனும் சேர்ந்துகொள்வார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம், ஈழப்புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் சென்னைப்பேச்சுக்களில் பங்கேற்றன. (எ)

உலகச் செய்திகள்

## கராச்சி சம்பவங்களில் 120பேர் பலி; 500பேர்காயம் பத்து பேர் உயிருடன் எரிப்பு!

கராச்சி, டிச 16

பாகிஸ்தான் கராச்சியில நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் பலியானவர்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது. மேலும் சுமார் 500 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

வங்கிகள் உட்பட நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் தீவைக்கப்பட்டன. சுமார் பத்துபேர் உயிருடன் தீமூட்டி எரிக்கப்பட்டனர்.

துப்பாக்கிச்சூடு, கல்வீச்சு, கத்திக்குத்து ஆகிய சம்பவங்களில் காயமடைந்தவர்கள் பலர் கவலைக்கிடமான நிலையிலுள்ளனர்.

இதேவேளை இவ்வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் போதிய அளவு ராணுவமோ, பொலிஸ்படைகளோ இல்லையெனக் கூறப்படுகிறது.

ஒரு மாவட்டத்தை மட்டும் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் ஓரளவு கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் கராச்சிக்கு விரைந்துள்ளார். (எ)

## "தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம்" தேசிய கிறிஸ்தவ இளைஞர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கையின் ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் தமிழ் பேசும்மக்களை தேசிய இனமாக அங்கீரிப்பதுடன் அவர்களின் சுய நிர்ணய உரிமையையும் அங்கீரிக்கிறோம்"

யாழ் பரியோவான் கல்லூரி 'பீற்றோ' ஞாபகார்த்த மண்டபத்தில நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தேசிய கிறிஸ்தவ இளைஞர் சங்க செயலாளர் திரு லஷ்மன் குணசேகரா இவ்வாறு கூறினார்

யாழ்ப்பாண அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட்திரு. டி. யே அம்பலவாணர் அடிகளார் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு சகல திருச்சபைகளையும சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவ இளைஞர் சங்க செயலாளர் திரு லஷ்மன் குணசேகரா அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அண்மைக்காலங்களில் தமிழ்மக்கள் படையினரால் படுகொலை செய்யப்படுவதைக் கிறீஸ்தவ இளைஞர் சங்கம் குரல் கொடுத்து வந்துள்ளது. இப்படுகொலைகளை எப்பொழுதும் நாம் கண்டிக்கிறோம்.

"கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து தமிழ் மக்களின் அன்றாட பிரச்னைகள், நிலைமைகளை நன்கு அவதானித்துள்ளோம். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான தேவாலயங்களுக்குச் சென்று அங்கு தமிழ் மக்களின் குறைகளை அறிந்து அவர்கள் மத்தியில் அருளுரைகள் நிகழ்த்தியுள்ளோம். இவற்றை எல்லாம், தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவோம.

அருட்திரு ஆர். எவனேசர் அடிகளார் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்மக்கள் படும் கஷ்டங்களையிட்டு இலங்கையின் எப்பாகத்திற்குச்சென்று நாம் அவர்களுக்கு ஆறுதல் கூறி வருகிறோம். அண்மையில் கூட நாம் எமது உயிரையும் துச்சமாக மதித்து கல்முனையில் நடைபெற்ற சம்பவங்களையும் மக்கள் படும் துயரங்களையும் நேரில் சென்று அறிந்து வந்துள்ளோம்."

குருநாகல் அத்தியட்சாதீன பேராயர் அன்று குமாரகே ஆண்டகை உரையாற்றுகையில் "சில காலமாக வடக்குக்கும், தெற்குக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லாததினால் வடக்கில் என்ன நடைபெறுகிறதென்ற உண்மை நிலையை அறிய முடியவில்லை" என்றார்.

தேசிய கிறிஸ்தவ சங்கக் குழுவினரின் உரைகளைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

யாழ் பரியோவான் கல்லூரி முன்னாள் அதிபர் திரு பூரணம் பிள்ளை, பேராசிரியர் கு. நேசையா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி பராசசிங்கம் உட்பட பலர் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும்சம்பவங்களையும், தமிழ் மக்கள் படும் துன்பங்களையும், சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதாக அவர்கள் தெரிவித்தனர். (வா)

## தி. மு. க.விடம் கோரிக்கை

சென்னை, டிச. 16

ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சியையும் அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியை எரிப்பதையும் நிறுத்துமாறு பாரத கம்யூனிஸ்ட்கட்சி, திராவிடமுன்னேற்றக்கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

## ராஜீவ்- சொலாஸ் சந்திப்பு

புதுடில்லி டிச. 16

அமெரிக்கப்பிரதிநிதிகள் சபையின் ஆசிய பசுபிக் துணைத் தரப்பின் உபதலைவரான திரு. ஸ்டீபன் சொலாஸ் நேற்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நாகேந்திர திவாரி, கொள்கை திட்டமில் ஆலோசனைகள் முழுவின் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி ஆகியோருடனும் பேச்சுக்கள் நடத்தினார். (எ)

## சுயமாக இயங்கும் ரி. வி. நிலையம்

புதுடில்லி, டிச 16

எவரது துணையுமின்றி இயங்கும் தொலைக்காட்சி நிலையம் ஒன்று ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ராவட் பட்டாவில் அடுத்தமாதம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்த 'ட்ரான்ஸ் மீற்றர்' உபகரணம் சூரியசக்தியால் இயங்கும். சரிவுப் பகுதி மற்றும் மலைப்பகுதிகளுக்கு இந்த வகையிலான 'ட்ரான்ஸ் மீற்றர்' மிகவும் ஏற்றதாகும். (எ)

## கோவில் தகராறு சமரசத்தில்

ஊர்காவற்றுறை, செவ்.

பலவருடங்கள் கூட்டங்கள் கூடாமல் இருந்தும் நிர்வாகம் இல்லாமலும் இருந்தும் வந்த வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோவில் பிரச்னை விழிப்புக் குழுவினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது

## வண்ணை வைத்தீஸ்வர ஆலய சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தான சங்காபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் இன்று புதன்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது. (எ)

## விண்ணப்பப் படிவங்களுக்குத் தட்டுப்பாடு

சுண்டுக்குளி, செவ்

யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப் பத்திரங்களுக்கும் பிறப்பு. இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு. இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பப்பத்திரங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்படி விண்ணப்பங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் தரம்பாது வெளியாரிடம் அதிக விலை கொடுத்தே இவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். (சி)

## ஓவியப் பயிற்சி வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மாவட்ட கலாசார பேரவையினரால் நடாத்தப் படவிருக்கும் ஓவியர்களுக்கான ஓவியப் பயிற்சி வகுப்புக்கள் நாளை வியாழக்கிழமை காலை 8-45 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவில் 11ம் இலக்கத்திலுள்ள கலாசார நிலையத்தில் இப்பயிற்சி வகுப்புகள் யாழ் அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படும்,

ஓவியப் பயிற்சி ஆரம்ப விழாவில் பயிற்சிக்குப் பதிவு செய்யப்பட்டவர்களும் மற்றும் அனைவரையும் பங்குபற்றுமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (வா)

## இன்றைய பலன்

மாதம்: மார்கழி
திகதி: 2 (17-12-86)
கிழமை: புதன்
நட்சத்திரம்: திருவாதிரை
திதி: பிரதமை

மேடம்: மதிப்பு உயரும். திடீர் பயணமும் மேற்கொள்ளப்படலாம். தன்மான மிதிக்கும் தனவரவுக்கும் இடமுண்டு.

இடபம்: தொழில் துறையில் உற்சாகம் பிறக்கும். தொல்லைகளும் பிறக்கும். வாழ்க்கையிலும் முன்னேற்றம் பாதிக்கப்படும்

மிதுனம்: குறைகேட்க நேரிடும் வாத ரோகத்திற்குமிடமுண்டு. எவ்விடயத்திலும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

கடகம்: பூமி லாபமுண்டு. பேச்சுவன்மையில் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள் சிலருக்குப் புதுவாழ்வும் கிட்டும்.

சிங்கம்: நினைத்த காரியத் தடை நிதியில் முடக்கமுண்டு. உடல்நலத்தைப் பேணிக் கொள்ளவும்,

கன்னி: மாணவர்களாயின் உயர்வுண்டு. பொருள்வரவுமுண்டு பொதுசன தலைமையும் கிட்டும்.

துலாம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள். இதயம் இன்பத்தால் பொங்கும். இதயச்சுமையும் இன்று அகலும்.

விருச்சிகம்: இடைக்காலப் பிரிவுமுண்டாம் ஆயுதபீடையுண்டாம். அபாய காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

தனுசு: களஸ்திர வழியிலும் நன்மைகள் தோன்றும். கண்ணியம் கடைவிரிக்கும் பூமிப் பிணக்கும் நிவர்த்தியாகும்.

மகரம்: சிந்தனையின் தாக்குதலால் பாதிக்கப்படுவீர்கள், மனதிலும் அமைதி குன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்

கும்பம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு நன்மை. தந்தை வழியாலும் ஆதரவு பெருகும்.

மீனம்: இலட்சியவாதிகளுக்கு இன்று வெற்றித் திருநாள் எண்ணங்களும் கைகூடும். கடமையும் சிறக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"கடையவனேனைக் கருணையினாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய்
விறல்வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந் தேன்எம்பிரான்
என்னைத் தாங்கிக்கொள்ளே"

—மாணிக்கவாசகர்

# நமது நோக்கு

## கைகோத்து நிற்கும் படலம்

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச திட்டமிட்டுச் செய்யும் பணிகளில் பெரும்பாலும் பொதுமக்கள் தாமே முன்வந்து கலந்து கொள்ளக் கூடியதான அம்சம் எப்படியும் இடம்பெற்றிருக்கும் என்பது ஒரு விசேஷம்.

அவர் அமுல்படுத்தியுள்ள கிராமிய எழுச்சித் திட்டம், வீடமைப்புத் திட்டம் போன்றவற்றில் அரசாங்கத்தின் பங்களிப்புஓரளவே உண்டு; மிகுதி முழுமையும் இத்திட்டத்திற்குட்பட்ட மக்களே முன்வந்து சுயமுயற்சியால் பயன் பெறும்வகையில் செயல்படுத்தப்படுவதைக் காணலாம்.

அண்மையில் கொழும்பு நகரில் பிரதமரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேரணியில் தென்பகுதிக்கிராமங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள் அங்கே திரு பிரேமதாசா சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சொற்பொழிவாற்றினார்.

இனமொழி வேறுபாடுகள் இல்லாமல் இந்த நாட்டுத் தலைவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டும் என அவர் நம்பியிருக்க முடியும். இப்பொழுது இன்னொருவிதமான முயற்சியை திரு. பிரேமதாசா செய்துபார்க்கவிருக்கிறார்.

அமெரிக்க பாணியில் மக்கள் அனைவரும் கைகோத்துக்கொண்டு நிற்பதே அந்த ஏற்பாடு. டிசம்பர் 21ம் திகதி கொழும்பு நகரிலும், நாட்டின் ஏனைய முக்கியநகரங்களிலும் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் மக்கள் இனமதமொழிபேதமின்றிக் கைகோத்துக் கொண்டு நிற்பார்களாம். சர்வதேச வீடமைப்பு ஆண்டைஒட்டி அடுத்த ஆண்டு இது முழு நாட்டையும் உள்ளடக்கிய விதத்தில் ஏற்பாடுசெய்யப்படுமென்று கூறப்படுகின்றது.

கையைக் கோத்துக் கொண்டு நிற்பதன் மூலம் ஐக்கியம், சகோதரத்துவம், பரஸ்பர நல்லுறவு எல்லாவற்றிற்கும் மேலான அமைதியை இந்த நாட்டு மக்கள் மத்தியில் உருவாக்கமுடியும் என்று கருதப்படுகின்றது.

இந்த ஏற்பாடுகள் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே நாட்டில் அமைதிக்கும், பரஸ்பர நல்லுணர்வுக்கும் இது ஒரு துளியாகுதல் உதவிபுரியுமா என்பதில் எமக்கு மிகுந்த சந்தேகம் உண்டு.

அமைதியையும், ஐக்கியத்தையும் வற்புறுத்தி பாதயாத்திரையொன்றை சர்வோதய இயக்கம் நடத்தி வருகின்றது. இந்தயாத்திரை சிவனொளிபாதமலையில் முடிவடையும். அங்கே ஒரு பொதுக்கூட்டமும் நடத்தப்படவிருக்கின்றது.

சிவனொளிபாதமலையின் உச்சியில் நம் நினைவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சகல இனமக்களும் வருடா வருடம் உதயசூரியனைத் தரிசித்து மகிழ்கிறார்கள், இறைவனை வணங்கி திரும்புகிறார்கள் ஆனால் மலையடிவாரத்திலேயே இன மத, மொழி வேறுபாட்டினால் மனிதர்கள் அடிபடுகிறார்கள். அரசியல் குரோதத்துக்குள்ளாகும் ஏழைகள், பாட்டாளிகள் வஞ்சம் தீர்க்கப்படுகிறார்கள். பாரபட்சத்துக்குள்ளாகிறார்கள்.

மதத்தின்பேரால், இனத்தின் பேரால், மொழியின் பேரால் ஒதுக்கப்பட்டு நசுக்கப்படும் மனிதர்களின் உள்ளக்குமுறல்களை யதார்த்த ரீதியில் அணுகித்தீர்த்து வைக்க முடியாதநிலையில் பாதயாத்திரைகளை ஒழுங்கு செய்வதாலோ, கைகோத்துக் கொண்டுநிற்கச் செய்வதாலோ, பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

"உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும்" இந்த மனிதர்கள் கைகளைக் கோத்துக் கொண்டு நிற்பதனால் பத்திரிகைகளில் அழகான படங்களைப் பிரசுரிக்க உதவலாமேயன்றி நாட்டில் சகோதரத்துவத்தை நிலைபெறச் செய்வதற்கு உதவும் என்று கருதமுடியாது.

ஒருவருக்கொடுவர் முரண்பாடான கருத்துக் கொண்டு சிங்கள அரசியல் தலைவர்கள் கைகோத்துக் கொண்டு நிற்பது போன்று கேலிச் சித்திரமொன்றை ஆங்கில தினசரியொன்று வெளியிட்டுள்ளது அனுரா பண்டாரநாயக்க, பிரேமதாச, லலித் அத்துலத்முதலி, ஜே. ஆர். ஜயவர்தன, சிறிமா பண்டாரநாயக்க, விஜே குமாரணதுங்க ஆகியவர்கள் கைகோத்துக் கொண்டு நின்றால் எப்படியிருக்கும் என்பதை அக்கேலிச் சித்திரக்காரர் கற்பனையில் காட்டியுள்ளார்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள விசித்திரமான அரசியல் சூழ்நிலையில் சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள், பறங்கியர் அனைவரும் ஒருவரோடொருவர் கைகோத்துக் கொண்டு நின்றும், பாதயாத்திரை சென்றும் சகோதரத்துவத்தையும் அமைதியையும் ஏற்படுத்த முடியுமானால் அது பெரிய உலக அதிசயமாகவே இருக்கும்.

அதுவல்ல, இந்த நாட்டில் இன்று அமைதியில்லை. அதற்கான அடிப்படைக் காரணம், சிங்கள பெரும்பான்மையினரால் தோற்றுவிக்கப்பட்ட அரசுகள் உருவாக்கிய ஓரவஞ்சகமான சட்டங்களும் திட்டங்களுமே. இதனை இத் தலைவர்கள் இன்றுவது உணர்ந்து இந்த நாட்டுத் தேசிய சிறுபான்மையினர் தமக்குரிய பங்கினைப்பெற உதவுவார்களானால், கைகோத்துக்கொண்டு நின்று உலகுக்குக் காட்டவேண்டிய அவசியம் ஏற்படாது.

சிங்கள மக்களுடன் ஏனைய மக்களும் உளத்தால் பிணைக்கப்பட்டவர்களாவார்கள். அமைதி [illegible]

# இனப்பிரச்னை தீர்வுக்கு அவசியமானால் அரசியல் யாப்பைதிருத்தியமைக்கலாம்

**'இனப்பிரச்னைத்தீர்வுக்கு அவசியமானால் அரசியல் யாப்பைத் திருத்தி அமைக்கலாம். அரசியல் யாப்பைத் திருத்தி அமைப்பதானது இங்கு புதியவிடயமல்ல'**

(நேற்றைய தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பாரம்பரிய தமிழர் தாயகம் தான் என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. சிலவற்றைப் பார்க்கலாம்.

(1) 1799ம் ஆண்டு காலனித்துவ (குடியேற்ற) காரியாலயத்துக்கு சேர். ஹூகிளேகோன் சமர்ப்பித்த அறிக்கை பின்வருமாறு பேசுகின்றது:

"வெகு காலத்துக்கு முன்பிருந்தே இந்தத் தீவானது பல தேசியங்களாகப் பிரிக்கப்பட்டே இருந்துவந்துள்ளது. முதலாவதாக தெற்கிலும், மேற்கிலும் வாழ்ந்த சிங்களவர்கள் வளவகங்கையிலிருந்து சிலாபம் வரையிலும், இரண்டாவதாக வடக்கு கிழக்கில் மலபாரிகள் [தமிழர்]"

(2) 'இலங்கையின் சரித்திரம்' என்ற நூலில் கே.எம். டி சில்வா கூறுகிறார்:

"சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக கண்டிய பிரதானிகள் (செல்வாக்கு மிக்க கண்டிய அரசியல் ஸ்தாபனம்) நாட்டை 3 சுயாட்சி பகுதிகளாகப் பிரிக்க வேண்டும் என்ற திட்டத்தை (டொனமூர் கமிஷன் 1929) முன்வைத்தார்கள். [1] தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்குகிழக்கு மாகாணங்கள் [2] கண்டிய மாகாணங்கள், [3] பெரும்பாலும் கீழ்நாட்டுச் சிங்களவர்களைக் கொண்ட தெற்கு மேற்கு மாகாணங்கள்.

(3) முன்னெடுங்காலம் தொட்டு 1876ல் திருமண உரிமை வாரிசு உரிமைகள் சட்டம் அமுலுக்கு வரும்வரை திருகோணமலையில் வாழ்ந்த தமிழர்கள் தேசவழமைச் சட்டங்களாலேயே ஆளப்பட்டு வந்தனர். அதேபோன்று முக்குவ சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மக்கள் ஆளப்பட்டனர்.

[4] 1956ல் உருவான பண்டா-செல்வா ஒப்பந்தம், 1965ல் உருவான டட்லி-செல்வா ஒப்பந்தங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ்த் தன்மைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

(5) இன்றைய அரசும் முந்திய அரசும் தமது அரசியல் யாப்புக்களில் வடக்கு, கிழக்கு மாகாணப் பிரதேசங்கள் மொழிவாரியாக தமிழ்ப் பகுதிகள் என்று ஒப்புக் கொண்டுள்ளன.

வடக்கு கிழக்கு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தமிழ் மொழியில் நடத்துவதற்கான விதிகள் 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பின் 11ம் சரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் 22—24 சரத்துக்களில் குறித்த மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(6) 1921ம் ஆண்டின் மக்கள் கணிப்பீட்டின்படி திருகோணமலையில் சிங்களவர் தொகை 4 4 ஆகவும் மட்டக்களப்பில் 4 59 ஆகவும் இருந்துள்ளது. எஞ்சிய 95 வீதமும் தமிழ் பேசும் மக்களான இலங்கைத் தமிழர்கள் முஸ்லிம்கள் இந்தியத் தமிழர்கள் ஆகியவர்களாகவே இருந்துள்ளனர்

### தனியான ஆட்சிகள்

போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாண ராஜதனி தனியாகவேசெயல்பட்டு வந்துள்ளது நாட்டைக் கைப்பற்றிய வெளிநாட்டவர்கள் கண்டி, யாழ்ப்பாணம், கோட்டை ஆகியவற்றைத் தனித் தனியாகவே ஆட்சி செய்தார்கள். கோல்புரூக் ஆணைக்குழுவின் சிபாரிசைபடுத்து 1833 ம் ஆண்டில்தான் பிரிட்டிஷாரால் இவை ஒன்றிணைக்கப்பட்டன.

**சி. எஸ். செபரட்ணம்**

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கான முயற்சியில் தமிழ்த் தலைவர்களின் பங்களிப்பு சிங்களவர்களுக்கு குறைந்ததல்ல. பிரிட்டன் ஆட்சியைத் யுத்தகளத்தில் தோற்கடிக்கப்படவில்லை. இலங்கையர் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடையவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்கினார்கள். எனவே இந்த நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்ற மாத்திரத்தே மீளவும் சிங்களவரும் தமிழரும் தனித்தனி தேசியங்களுக்குரியவர்கள் என்றநிலை ஏற்பட்டுவிட்டது. என்றாலும், ஓர் இனம் மற்ற இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தமாட்டாது என்ற பரஸ்பர நம்பிக்கையில்இரு தேசியஇனங்களும் பிரிட்டிஷார் விட்டுச்சென்ற ஒற்றை ஆட்சி முறையின் கீழேயே செயற்பட இணங்கிக் கொண்டன ஆனால் சிங்கள பெரும்பான்மைத் தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடந்த பல வருடங்களாகவே தமிழர்களை அடக்கியும் ஒடுக்கியும் அவர்களை போர்ப்பாதைக்கு தள்ளிவிட்டன.

இன்று தமிழ் இளைஞர்கள் தமிழர்களுக்கென தமிழ் ஈழம் ஒன்றை அமைக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார்கள்.

### சுயாட்சி

பிராந்திய சுயாட்சி என்பது நாட்டின் இறைமை ஒருமைப்பாடு என்ற அரசின் கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவே அமைகின்றது அது சிங்களவர்களின் அதிகாரங்களைக் குறைத்துவிடாது. சமஷ்டி அமைப்பின்கீழ் தமிழர்களுக்கான சுயாட்சி மாநிலங்களுடன் மேலும் இரு மாநிலங்களை - ஒன்று கண்டிய சிங்களவர்களுக்காகவும் மற்றயது கரையோரச் சிங்களவர்களுக்காகவும் அமைத்துக்கொள்ள முடியும். மேலும் ஒரு குறிப்பிட்ட இனரீதியிலான மக்கள் தொகையின் குறித்த பிரதேசத்தின் மக்கள் பண்புகளுடன் மாறுபட்டவர்களாய் ஒருமித்துவாழும் பகுதிகளில் மேற்குறிய மூன்று மாநிலங்களிலும் அவைகளுக்குக்கீழ் இயங்கக்கூடியதான சிறு சுயாட்சி அமைப்புக்களையும் உருவாக்கி அம்மக்களும் தாம் வாழும் பிரதேசங்களிலேயே கணிசமான அளவில் சுயாட்சியை நுகர்வதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.

வடக்கு, கிழக்கில் வாழும் சிங்களவர்கள் மத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் வாழும் இந்திய வம்சாவளியினர், மேற்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் போன்ற மக்கள் கூட்டத்தினருக்கு இது பொருந்தும்.

### யாப்பை மாற்றலாம்

பிராந்திய சுயாட்சி என்ற கருத்து இலங்கைக்குப் புதிதானதன்று பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்களில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான யோசனைகளின் படி அதிகார மாற்றத்துக்கான இணக்கம் ஒன்று காணப்படுமிடத்தும் கூட அரசியல் யாப்பில் அதற்கு இடமில்லை என்று கூறி நிராகரிப்பதற்கு நியாயமில்லை.

அரசியல் யாப்பை மாற்றுவது அல்லது இரத்து செய்துவிட்டு புதிய யாப்பொன்றை ஆக்குவது அரசிற்குரியது. அப்படிச் செய்வதும் கூட இலங்கை அரசுக்குப் புதிய காரியமல்ல.

1946ம் ஆண்டு அரசியற் சட்டம் 1972ம் ஆண்டு முற்று முழுதாகப் புதுப்பிக்கப்பட்டது. அதுவும் கூட முற்று முழுதாக 1978ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கண்ணியமான முறையில்மாற்றுத்திட்டமாக முன்வைத்துள்ள ஒரே மொழிவாரி மாநிலக் கோரிக்கையானது பிரிட்டிஷார் வெளியேற்றத்துடன் எமக்குரித்தான சுதந்திரத் தமிழ் ஈழ வரலாற்று நிலைப்பாட்டுக்கு மிகவும் குறைவானதே. தமிழர் தாயகத்தை இரட்டையாக்கி குறைந்த அதிகாரங்களுடன் மாகாணசபைகள் இரண்டை வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனைகள் மேற்படி கோரிக்கைக்கு மிகத் தூரத்திலேயே நிற்கின்றன.

நன்றி: சற்றடே றிவியூ [தமிழில்-ஏப]

## ஆருத்திரா தரிசனம்

முருகப் பெருமானுக்குக் கார்த்திகை, விசாகம் என்பன உரிய நட்சத்திரங்களாக உள்ளமைபோல விநாயகப் பெருமானுக்குச் சதயமும் திருமாலுக்குத் திருவோணமும் உரிய நட்சத்திரங்களாக விளங்குதல்போல சிவபெருமானுக்கு உரிய நட்சத்திரமாக உள்ளது திருவாதிரையாகும். ஆதிரை நாள் உகந்தான் என்று திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானைக் குறிப்பிடுவார். திருவாதிரை நட்சத்திரம் என்று வானசாஸ்திர விற்பன்னர்களால் ஒரு கூட்டமான நட்சத்திரங்கள் குறிக்கப்படுகின்றன என்றும் அந்நட்சத்திரக் கூட்டங்களை ஒரு கோட்டினால் (கீறினால்) ஒன்றுபடுத்திப் பார்த்தால் நடராச உருவம் சித்தரிக்கப்படுவதைக் காணலாம் என்றும் கூறுவர். இவ்வாறு நடராசப் பெருமானுடன் ஒற்றுமையுடைய திருவாதிரை நட்சத்திரத்தில் நடராசப்பெரு

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்கள் உறுப்பினரின் உரிமைக்காக போராடவேண்டும்

யாழ்ப்பாணம் புதன்

"தொழிற்சங்கங்கள் உறுப்பினர்களின் உரிமைக்காகப் போராடும் அதேநேரத்தில் உறுப்பினர்களின் தொழில் உயர்வுக்காகவும் போராட வேண்டும்'' என்று தொழிற் சங்க உதவிப் பதிவாளர் திரு. உபாலி விஜயசேகர தெரிவித்தார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கம், பிரெடறிக் ஈபேட் மன்றம் ஆகியவற்றுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இணைந்து நடாத்திய கருத்தரங்கொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் இலங்கையிலுள்ளசில தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் உயர்வுக்காக உழைக்கின்றன அவற்றில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஒன்றென அவர் பாராட்டினார்.

ஐந்து நாள் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு பிரெடறிக் ஈபேட் மன்றத்தின் ஆசியப் பிரதிநிதி திரு பொட்ட வெக் சான்றிதழ்கள் வழங்கினார். (ஒ)


எமது இன்றைய புதிய வெளியீடுகள்

கோவைத்தம்பியின்
நடிகர்திலகம் சிவாஜி சுஜாதா, கவுண்டமணி நடித்த
(1) மண்ணுக்குள் வைரம்
சத்தியராஜ். நதியா நடித்த
(2) மந்திரப் புன்னகை
விஜயகாந்த். அமலா நடித்த
(3) ஓர் இனிய உதயம்
சுரேஷ் ஜெயஸ்ரீ, ஆனந்பாபு நடித்த
(4) மௌனம் கலைகிறது

வீடியோ பிரசாத்
இல. 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(A 3340)



நியூ விக்ரேஸ் புதிய ஒடியோ வெளியீடுகள்

[1] பக்திகான அமுதம் [வாணி ஜெயராம்] L. P.
[2] ஸ்ரீசக்ர நாதங்கள் [T. M S] L. P.
[3] அம்மனுக்கு சமர்ப்பணம் [L R ஈஸ்வரி] L. P.
4] ப வசகீதை L. P.
5] CLASSICALMUSIC [K J ஜேசுதாஸ்] L. P.

கதை வசனங்கள்
[ ] மெல்லத்திறந்தது கதவு 1 Hour
[2] லட்சுமி வந்தாச்சு 1 Hour
[3] தர்ம தேவதை 1 Hour
[4] அறுவடைநாள் 1 Hour

நியூ விக்ரேஸ்
எலெக்ரோணிக் கொம்பிளெக்ஸ்,
23, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
T. P. 23532 [A 3341]



மிது வீடியோ மூவீசாரின் இன்றைய வெளியீடுகள்

(1) சிவாஜி, சுஜாதா, முரளி, ரஞ்சினி கவுண்டமணி, செந்தில் நடித்த
கோவைத்தம்பியின்
மண்ணுக்குள் வைரம்
(தரமான பிரதி)
(2) உங்கள் சத்யராஜ், இருவேடங்களில் ரேவதி, செந்தில் ஆகியோருடன் நடித்த
மந்திரப்புன்னகை
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி
[A 3342]


## கைதானவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகளின் விசாரணைக் குழுவினால் நேற்று ஆரம்பிக்க பட்டுள்ளது

இந்த விசாரணையின் பின்னர் சிலர் விடுவிக்கப்பட்டு வருவதாக விடுதலைப்புலிகள் வட்டாரம் தெரிவித்தது.

இதேசமயம் நேற்றும் விடுதலைப்புலிகளின் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்றது

இத்தேடுதலின்போது பலர் கைது செய்யப்பட்டதாகவும் சிலர் சரணடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (மா)

## முஸ்லிம்களுடனும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மாகாணசபை அமைவதோ சிங்கள மாகாணசபை அமைவதோபற்றித் தமக்கு ஆட்சேபனையில்லை எனத் தெரிவித்த கலாநிதி மொஹமட், முஸ்லிம்களுக்குக் கிடைக்கவேண்டிய அதிகாரங்கள் கிடைத்தால் தமக்குப் போதும் எனக் கூறினார்.

### சிதம்பரம் குழுவை சந்திப்பேன்

புதனன்று இங்குவரும் சிதம்பரம் குழுவினரைத் தாம் சந்திக்கவுள்ளதாகக் கூறிய கலாநிதி மொஹமட், இச்சந்திப்பிற்கான திகதி நிச்சயிக்கப்படவில்லை எனக் கூறினார் (கூ-ஊ)

## ஆருத்திரா

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவது சைவமக்களின் ஒழுக்கமாகும் திருவாதிரையில் நடராசப் பெருமானைத் தரிசிப்பதால் ஏற்படும் சிவானந்தச் சிறப்புக் கருதியே இத்தின வழிபாட்டை ஆருத்திரா தரிசனம் என்பர்

ஆதியும் அந்தமும் அற்ற அரும்பெரும் சோதியும் மாலறியாத நான்முகனும் காணாத பெருமையும் நுண்மையும் உடைய சிவபெருமான் ஏழைப் பங்காளனாக அடியார்க்கு எளிதில் அருள் புரியும் தன்மை உடையவனாக இருப்பதனால் திருவாதிரை நட்சத்திரத்தில் நடராசப் பெருமானைத் தரிசிப்பதில் சாதாரண மக்களாகிய சைவமக்களெல்லாம் ஆர்வம் மிக்கவர்களாக விளங்குகின்றனர் யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்களான திருவடிகளை உடையவரும் ஏழைகளிடம் உள்ள ஏழ்மையைப் பொருட்படுத்தாது அவ்வேழைகளிடம் உள்ள அன்பையும் பண்பையும் பெரிதென மதிக்கும் ஆனந்தக் கூத்தனை ஆருத்திரா தரிசன நாளில் தரிசனம் செய்வது காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் பயன்மிகு செயலாகும்.

தி. பொன்னம்பலவாணர்


லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
சுகாதகர் -ராதிகா நடித்த
கிழக்கே போகும் ரயில்
கலர் (புதிய பிரதி)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4.30, 6-30
ஆண்டுகளை காதல் லீலைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த
Samantha Fox
in
TOO HOT TO HANDLE
Action, Thrill, Sex
(Strictly Adults only)


## வட்டகொடயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

றுமைகளினால் இம்மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது இம்மோதலின் போது சி சிவலிங்கம் (வயது 28) என்ற தொழிலாளி தலையில் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மரணமானார். இதனையடுத்து கல்வீச்சுச் சம்பவங்களும் இடம்பெற்றன.

### பொலிஸார் மறுப்பு

இம் மோதல்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்த போது தோட்ட நிர்வாகம் வட்டகொட பொலிஸாருக்கு இது பற்றி அறிவித்தபோது அவர்கள் அவ்விடத்திற்கு வரமறுத்துவிட்டனராம். அங்கு சென்றால் தமக்குப் பிரச்சினை என்ற படியினால் அங்குசெல்ல மறுத்தனராம். (ஊ

## தமிழர் சிங்களவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் அங்கிருந்த சிங்களமக்களைத் தாக்கியதுடன் சிங்களமுதலாளியின் கடையைச் சேதப் படுத்தியுமுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து அப்பகுதியில் சென்ற பஸ்கள், தனியார் பஸ்கள் ஆகியவை இனந்தெரியாதோரின் கல்வீச்சுக்குட்பட்டன. இதனையடுத்து தலவாக் கொல்லைக்கும் நுவரெலியாவுக்கும் இடையிலான போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப் பட்டதுடன் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது

இச்சம்பவத்தின் போது நாகம்சலையிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள ஹற்றனில் இருஇன மக்களும் பங்குபற்றிய சமாதான யாத்திரை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஊ)

## கல்முனை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

ஹாஜ் மொஹமட். நேற்றுக் காலை ஹெலிகொப்டர் மூலம் கொழும்பிலிருந்து கல்முனைக்கு வந்து சேர்ந்தார்

அமைச்சர் இறங்கியிருந்த இடத்தில் அவரை வரவேற்க அங்கு முஸ்லிம்களோ தமிழரோ ஒவருராவது காணப்படாதது கண்டு அமைச்சர் பெரும் ஏமாற்றமடைந்தார்

பூரண ஹர்த்தாலால் அங்கு ஆளரவமின்றி வீதிகள் வெறிச்சோடின எந்தவொருவாகன நடமாட்டமுமிருக்கவில்லை கடைகள், தனியார். பொதுஸ்தாபனங்கள் சகலதும் மூடப்பட்டிருந்தன.

பொதுவாக சகல மக்களும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

பலத்தபாதுகாப்புடன் வந்த அமைச்சரும் வன்முறை சம்பவங்களால் எரிந்த, பாதிக்கப் பட்ட சில இடங்களை தமது சகாக்களுடன் அவசரமாகப் பார்வையிட்டு, மீண்டும் ஹெலிகொப்டரில் ஏறி தமது இருப்பிடத்துக்கு திரும்பி விட்டார்.

கடந்த சனிக்கிழமை காலை ரோந்து சென்ற பொலிஸார் மீது போராளிகள் திடீர்த் தாக்குதல் மேற்கொண்டதில் ஒருசப் இன்ஸ்பெக்டரும் மூன்று பொலிசாரும் கொல்லப்பட்டதும், இதனை அடுத்து கமாண்டோக்கள் மேற்கொண்ட தாக்குதலின் போது, நான்கு முஸ்லிம்கள் பலியானதும் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் தீயிட்டு நாசமாக்கப்பட்டதுடன் வீடுகள், கடைகள், வணக்கஸ்தலங்கள், மின் இந்துக்கோவில்களும் சேதப் படுத்தப்பட்டதும் தெரிந்ததே (மா)

## காந்திசேவா சங்கத்திற்கு சொந்தமானது

கிளிநொச்சி, செவ்.

உருத்திரபுரத்திலுள்ள அகில இலங்கை காந்திசேவா சங்கத்திற்குச் சொந்தமானதே அண்மையில் கொள்ளையடிக்கப் பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கைத்தொழில் இயந்திரங்கள் என்று காந்திசேவா சங்கப் பொதுச் செயலாளர் ஆ செல்லத்துரை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## கதிரவெளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட 7 பேர் பற்றியும் பிரஜைகள்குழு விசாரித்தபொழுது, அவர்கள்பற்றி எதுவித தகவலும் ஆயுதப் படை முகாம் அதிகாரிகள் தெரிவிக்கவில்லை என்று மட்டு பிரஜைகள்குழு செயலாளர் சட்டத்தரணி சாம்-தம்பிமுத்துதெரிவித்துள்ளார்.

## தற்போதைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைச் சம்பவங்கள் ஆகியவை இடம்பெற்றனவென்றும், இலங்கை சுதந்திரமடைந்த பின்பு இடம்பெற்ற தேர்தல்களில் மிகவும் மோசமான முறையில் இடம் பெற்றது இதுவே எனவும் தேர்தல் ஆணையாளர் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்

இந்த மூன்று கட்சிகள் இணைந்த இமூன்னணி விடுத்துள்ள அறிக்கையில்; இவ் வாக்கெடுப்பில் பலமோசடிகள் இடம்பெற்றனவென முன்னர் கூறப்பட்டபோது இப்போது சுயாதீன ஆணைக்குழுவொன்றினால உறுதிப்படுத் தப்பட்டுள்ளன இதன்படி தற்போதைய ஐ தே க அரசாங்கம் சட்டப்படி பதவியிலிருக்க முடியாது எனவே பாராளுமன்றம் கலைக்கப்படுவதுடன் பொதுத்தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும் 'எனவலியுறுத்தியுள்ளது.

இம்முன்னணியில் திரு. விஜயகுமாரணதுங்க தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் அங்கம் வகிக்கின்றது.

நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமென இமுன்னனி கோரியிருப்பது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஊ)

## ஆயுதங்களை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

சூறையாடுபவர்களுக்கும், பொதுவாக சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கும் பயன்படலாம். ஆதலால் அந்த ஆயுதங்களைக் கண்டெடுத்தோர் அல்லது வைத்திருப்போர் உடனடியாக எமது முகாங்களுடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்குமாறும் தகவல் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்

'ஈ பி ஆர் எல் எவ் வையும் அதன் மக்கள் விடுதலைப்படையையும் சேர்ந்தவர்களுள் அநேகமானோர் கைது செய்யப் பட்டும் சரணடைந்துமுள்ளார்கள்; மேலும் தலைமறைவாகத் திரிவோர் உடனடியாக எம்மிடம் சரணடைந்து விட வேண்டும்.

''பெற்றோர்கள், அல்லது உறவினர்களுடன் தங்கியிருப்போர் அவ்வவ் பகுதியிலுள்ள எமது முகாங்களில் ஒப் படைக்க வேண்டும்.

'மேலும் பொதுஸ்தாபனங்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் ஈ பி, ஆர். எல் எவ் வால் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துடமைகள் எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றைப் பறிகொடுத்தவர்கள் எம்முடன் தொடர்புகொண்டுதகுந்த அத்தாட்சிபத்திரங்களை சமர்ப்பித்துப்பெற்றுக் கொள்ளலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87 A/L Day Class

Pure — சிக்கல் எண்
App — நீர்நிலையியல்

திங்கள் தொடக்கம் வெள்ளி
(7-00—9-00)

குறிப்பு: விடுமுறை நாட்களில் முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

# A/L 87 மாலை நேரம்

Pure — பரவளைவு
App — மொத்தல்

சனி, ஞாயி, திங், புதன் (4–6 மாலை)

# 88 A/L

Pure — வகையிடு
App — காவிகள்

வியா, வெள்ளி 4–6 மாலை

ஆசிரியர்: A. பத்மநாதன்

விபரங்கட்கு:

NIRU TUITION CENTRE
KONDAVIL

(A-3255)


## புதிய குடியிருப்பு

உரும்பிராய், செவ்வாய் கோண்டாவில் வடக்குப் பகுதியில் இருப்பிட வசதியற்ற பதினெட்டு குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கு மத்திய கிராமமுன்னேற்றச்சங்க இணக்கசபையின் முயற்சியினால் அமைக்கப்பட்ட இக்குடியேற்றத்திட்டத்துக்கு புதிதாக பாதைவசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ——

## உணவு முத்திரை

(வேலணை)

தீவுப்பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் அரசின் கடல் வலயச் சட்டத்தினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுவருகின்றார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான விசேட உணவு முத்திரைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவுப்பகுதியில் உள்ள நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய உதவி அரசாங்க அதிபர்களினது காரியாலயங்களில் அதிதுரிதமாக செயல்பட்டுவருகின்றது இம்மாதம் முடிவதற்குள் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு விசேட உணவுமுத்திரைகள் வழங்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது.


# ஸ்ரீ மேகலா ரேடர்ஸ்

இல. 9, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

ஸ்தாபனத்தார் சகல வாடிக்கையாளர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் எல்லோருக்கும்

**நத்தார் புதுவருட வாழ்த்துக்களை**

பெருமகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்கள்.

தரமான எசன்ஸ் வகைகள்!
கலர் பவுடர் வகைகள்!!
கேக் தயாரிக்கும் பொருட்கள்!
பேக்கரி உற்பத்தியாளருக்குரிய சகல பொருட்களும்!
பொலித்தீன் வகைகள்!!
வெளிநாட்டு பட்டர், மாஜரின்!!!

யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

## ஸ்ரீ மேகலா ரேடர்ஸ்

இல. 9. காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(C 6409)

# கொமட் சுப்பர்



கொமட் சுப்பர்
எரி பொருட் சிக்கனம்,
அதிக பாரம் கொள்ளாற்றல்,
திறமையான இயக்கம்
ஆகியவற்றுக்கு




உறுதி வாய்ந்த, வலிமை மிக்க கொமட சுப்பர் எல்லா நிலைமைகளிலும், கடினமான, ஒப்புரவற்ற வீதிகளிலும் அதன் சிறந்த செயலாற்றத்தையும் நம்பகத் தன்மையையும், கடினத் தன்மையும் ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபித்துள்ளது.

**விசேட அம்சங்கள் :**

★ சக்கரங்களுக்கிடையே குறுகிய இடைவெளி 166"
★ பாரமேற்றும் இடப்பரப்பு 224"
★ ஒரே துண்டான அழுத்தம் கூடிய பின் அச்சு
★ வேறு இதர வாகனங்களை விட அதிக சரக்கு கொள்ளும் தன்மை
★ சிறிய வட்ட விட்டத்துள் திருப்பக் கூடியதிறமையான இயக்கம்
★ அசோக் லேலன்ட் கொமட்டுடன் எல்லா உதிரிப் பாகங்களும்
★ மாற்றிக் கொள்ளத்தக்கவை
★ மிக நேர்த்தியான முழு ஏயர் - பிரேக் முறை, முற்றிலும் பாதுகாப்புக்கும் இலகுவான பேணலுக்குமான அமைப்பு மற்றும்பல
★ இருப்பிவிருத்து / குறுகிய விநியோகம்

மற்றும் பல சகலதும் உள்ளடக்கிய விலை ரூபா 400,000/- க்கு மேல் ஒரு சேஸிஸ்.

dave1558

சந்தைப்படுத்தல் முகாமையாளர்,

## லங்கா அசோக் லேலண்ட் லிமிடட்

60, பார்க் வீதி, கொழும்பு-2. தொலைபேசி: 541003

கொள்ளுப்பிட்டி வாக்கர் சன்ஸ் & கம் - லிமிட்டெட் மற்றும், கண்டி, காலி, நுவரேலியாவிலுள்ள அவர்கள் கிளைகள் மூலமாக விற்பனைக்குப் பின்னரான சேவை வழங்கப்படும்.

கொமட் சுப்பர் - இழுவை தேவைக்கு ஈடிணையற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பூபாலசிங்கம்**

மஸ்கன் கம்பனி லிமிட்டெட் கார் சாரதி]

தோற்றம்: 1930-11-20

மறைவு: 1985-12-27

உலகம் போற்றும் உயர் தனச் செம்மல், உலகோர் கலங்கவும் உற்ருேர் ஓங்கவும் நட்பின் நெஞ்சப நடுங்குதுயர் எய்தவும பெயோபேசியே பிரலாபிக்கவும் பிள்ளைகள் மனது பேதுற்று அலறவும் மமைது மறுகி மனைவி கலங்கவும், பேரப் பிள்ளைகள் பெரிதும் ஏங்கவும் மானில மதனை நெகிழ்வுடன் நீத்து சிவனடி சேர்ந்தனன் சிறப்புடன் அன்றே.

அன்புடன் மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இராஜகாரியர் வீதி
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். C 6412


## "பூச்சி கொல்லிகளை விவசாயிகள் அவதானமாகப் பேணுவது அவசியம்"

மாவிட்டபுரம், செவ்.

'பூச்சி கொல்லி மருந்துகளை மிகுந்த அவதானத்துடன் விவசாயிகள் பேணாமல் அசிரத்தையாக இருப்பதனால் தான் அவை ஆட்கொல்லிகளாக மாறுகின்றன. பூச்சி கொல்லிகளை உபயோகிப்பது குறித்து வழிமுறைகளை மக்களுக்கு புகட்ட வேண்டியது அவசியம்'

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் மாவை லயன்ஸ் கழகம் நடத்திய பூச்சி கொல்லிகளும் அதன் பாவிப்பு முறைகளும்' என்னும் கருத்தரங்கில் உரையாற்றிய திரு எஸ். செல்வரட்ணம் கூறினர்.

வைத்திய கலாநிதி என். சரவணவானந்தன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு செல்வரட்ணம் மேலும் பேசுகையில் பூச்சி கொல்லிகளை உபயோகிக்கும் போது கையுறை, காலுறை, சுவாசப் பாதுகாப்பு அங்கி ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். மருந்து தெளித்த காய்கறிகளை குறித்த நாட்களுக்கு முன் சந்தைப்படுத்துவதாலும் மருந்து மக்களின் உடலில் செறிந்து வாந்தி பேதி உண்டாகி தீங்கு விளைவிக்கின்றது. ஆகவே இதுவிடயத்தில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்' என்ருர்

லயன் ஏ. வி. சர்மா உட்பட பலர் கருத்துரை வழங்கினர்.

திரு: க. கதிரமலையான் நன்றி கூறினர். (எ)

## செய்தி தந்த பலன்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் பஸ் நிலையத்தில் அநாதரவாக நின்றிருந்த சிறுமி ஒருவரை மீட்டுப் பெற்றோரிடம் ஒப்படைத்த வகுப்புத் தொழிலாளர் சங்கத்திற்கு சிறுமியின் பெற்றோர் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

அநாதரவான இச்சிறுமி பற்றிய செய்தி நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் வெளியானதையடுத்தே இச்சிறுமியைப் பெற்றோர் கண்டு பிடிக்க முடிந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## இருளின் பிடியில் பலாலிக் கிராமம்

மாவிட்டபுரம், புதன்

கடந்த இரு மாதங்களாக பலாலிக் கிராமம் முற்ருக இருளில் மூழ்கியுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமுறுவதாக மயிலிட்டி, பலாலி இணைப்பு பிரஜைகள் குழு யாழ் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

வசாவிளான் சந்தியில் அமைந்திருந்த உப மின் நிலையம் எரிந்தமையால் பலாலிக் கிராமம் கடந்த இரண்டு மாதங்களாக மின்விநியோகம் இன்றி இருளில் மூழ்கியுள்ளது.

இது குறித்து மேற்படி இணைப்பு பிரஜைகள் குழு மின்சார சபை பிராந்தியப் பொறியியலாளர், மயிலிட்டி உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்கும் அறிவித்து உப மின்நிலையத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது. (எ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்

'தினமும் பெரிய புராணத்தை ஓதினல் மனிதனுக்குச் சுதந்திரம் தானுகவரும் என கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் தமது பெரிய புராண முகவுரையில் எழுதியதோடு இக் கருத்தைத் தெரிவித்தவர் தெல்லிப்பழை திரு கனகராயர் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.''

இவ்வாறு திருத்தொண்டர் புராண வினவிடை வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய திரு. ம சிதம்பரப்பிள்ளை கூறினர். இவ்விழா அண்மையில் தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது. பௌராணிக வித்தகர் வ. கு. க. சர்மா நூலை வெளியிட்டு உரை நிகழ்த்தும்போது நூலாசிரியரான சி. ஸ்ரீ சி கமலசலிங்கங்குருக்களின் சேவை மனப்பான்மையையும் முயற்சியினையும் பாராட்டினர் தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை வெளியீடாக திருத்தொண்டர் புராணம் வினவிடை என்னும் நூலின் முதற் பிரதிகளை இச்சபையின் பழைய மாணவர்களில் பதினறு பேர் பெற்றனர். (ப)

## புனரமைப்புப் பொதுக் கூட்டம்

மாவிட்டபுரம், செவ்.

இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வலி வடக்குக் கிளையின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 19ம் திகதி தெல்லிப்பழை ப. நோ கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர்செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ தெய்வேந்திரன், தெல்லிப்பழை ப நோ கூ சங்கத் தலைவர் திரு. எஸ் சிவமாராசா ஆகியோர் கருத்துரை வழங்குவர். (எ)

## வித்தியாலய சுற்று மதில்

வேலணை செவ்

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தின் வளவைச் சுற்றி முழுமையான சுற்று மதிலை அமைப்பதற்கு வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையினரும், கல்வி குழுவினர், பெற்ருேர்கள் மற்றும் பொது நலன்விரும்பிகளும் கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்

இதற்கான நிதி சேகரிக்கும் பணியில் நிதி சேகரிக்கும் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

# மக்கள் சேவையில் அம்புலன்ஸ் வண்டி

யாழ்ப்பாணம், புதன்.

"எமது பகுதி பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் அம்புலன்ஸ் வண்டி ஒன்று இப்பகுதி மக்களின் அவசரதேவைக்காக சேவையில் விடப்பட்டுள்ளது. இந்த அம்புலன்ஸ் வண்டியை, சகல வெளிக்கள சுகாதார சேவைகளுக்கும் பயன்படுத்தலாம்.''

தெல்லிப்பழை சுகாதாரப் பகுதியின் அபிவிருத்திச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்த அம்புலன்ஸ் வண்டியை நீதியான கட்டணமொன்றுடன் பொதுமக்கள் உபயோகிக்கலாம், உயிர் காக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும். இவ்வாகனத்தில் முதலுதவிப் பயிற்சித் தொண்டர்கள் கடமையில் ஈடுபடுவார்கள்.

"தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இருந்து துர்க்காதேவி ஆலயத்தின் முன்பாக சேவையில் ஈடுபடும் இவ்வாகனத்தை பயன்படுத்த விரும்புவோர் ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொண்டு சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்

"மேலும் வெளிக்கள சேவைகள் பகுதி தேவைக்கேற்ப நடாத்தப்படும் முதல் சேவையாக எமது பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலயங்களூடாக சொறி, சிரங்கு உள்ள பகுதிகளுக்கு நடமாடும் சிகிச்சை நிலயங்கள், எதிர்வரும் 20ம் திகதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நடாத்தப்படும். இதைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களிலும் இவை தொடரும். இதற்கான விபரங்களை அறிய அண்மையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலயத் தொண்டரை அலவாவிடக் பகுதி குடும்பநல சேவையாளர் சுகாதாரப் பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

"எமது பகுதியிலுள்ள வசதிகுறைந்த போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட தாய்மார், சிறுவர்கள நலன் கருதி குழந்தைகள் பாதுகாப்பு கழகம் யாழ். இலுவலகத்தின் உதவியுடன் சில மருந்து வகைகள் எமது ஆரம்ப சுகாதார நிலயங்களுக்குக் குடும்ப நல சேவையாளரூடாக வழங்கப்பட்டுள்ளது. இவை பாதிக்கப்பட்ட தாய்மார் சிறுவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும். சிறு நோய்களுக்கான சிகிச்சையும் இயலுமான வரை அளிக்கப்படும்.

இப்பணிகள் தொடர்ந்து எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதற்கு பொது ஸ்தாபனங்கள் வசதிபடைத்தவர்கள் உதவவிரும்பினல் தெல்லிப்பழை கூட்டுறவு பணிமனையில் தொடர்பு கொள்ளலாம். (வா)

## சிறுவன் பலி

வேலணை செவ்.

தண்ணீர் நிறைந்த கிணற்றின் கட்டுக்கு மேல் நின்று விளையாடிக் கொண்டிருந்த 5 வயதுடைய சிறுவன் ஒருவன் அக்கிணற்றுக்குள் விழுந்து மரணத்தைத் தழுவிக் கொண்டான்

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இராசலிங்கம் சுதராஜ் என்னும் 5 வயது சிறுவனே இப் பரிதாப மரணத்தைத் தழுவியவராவார்.

## அன்பளிப்பு

அராலி, செவ்.

அராலி தெற்குத் தும்புத் தொழிற்சாலைக்கு கயிறு திரிக்கும் இயந்திரத்தை தொழில்நுட்ப சேவைகள் நிலைய அதிபர் எம். தில்லைநாதன் அன்பளிப்புச் செய்துள்ளார்.


## பிரயாண ஒழுங்குகள்

சவூதியில் கிளீனர்ஸ் (Cleaners) 20 பேருக்கு வருமான வாய்ப்புக்களுடன் பிரயாண ஒழுங்கு உடன் செய்துதரப்படும். 19-12-86-க்கு முன் பாஸ்போட் 6 படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**GROUP ATLANTIC**

இல. 163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக) [A3256]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சோமசுந்தரம் இராசரத்தினம்**
(மாவிட்டபுரம்)

தோற்றம்: 17-12-1948
மறைவு: 27- 2-1985
திதி: 17-12-1986

தாய் மண்ணின் பொருளாதாரம் பெருக கைத்தொழில் சுயமுயற்சிமேற் கொண்டு ஆலைத் தொழில் நிறுவ அருமைப் பங்காளியாகி தொழில் வளர்ந்தின் சோலைபோல் நின்ற இரத்தினமாம் இராசரத்தினம் மின்னல் போல எம்மைவிட்டு விண்ணகம் சென்று ஓராண்டு சென்று விட்ட போதும் என்றுமே மறவோம். அவர் நினைவில் பணி தொடர்வோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரிசூலன் எண்ணெய்
தொழிற்சாலை,
பிரதான வீதி
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

C 6411

# அறிவித்தல்

## மின்வெட்டு

இலங்கை மின்சார சபையினல் பொருத்தப்பட்ட அதி சக்திவாய்ந்த நிலத்திற்கு அடியில் வரும் மின்வடம் 13-12-86ம் திகதி பாலல் பழுதடைந்த காரணத்தினல் கடந்த 2 நாட்களாக இரவு நேரங்களில் மடம், குருநகர், சீனோர், பாஷையூர், குடியேற்றத் திட்டம் ஆகிய உபமின் நிலயங்களுக்கு மின் தடையேற்பட்டது.

பழுதடைந்த வடத்தை திருத்துவதற்கு சுமார் ஒரு வாரம் நீடிக்குமெனவும், கீழ் உள்ள சுற்றுவட்ட முறைப்படி 16-12-86ம் திகதி முதல் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணிவரை மின்வெட்டுவதென மின்சாரசபை எங்களுக்கு அறிவித்துள்ளது.

| திகதி | நேரம் | பாதிக்கப்படும் உபமின் நிலயங்கள் |
|---|---|---|
| ............ | .............. | .......................... |
| செவ்வாய்க்கிழமை 16-12-86றும் வெள்ளிக்கிழமை 19-12-86றும | மாலை 6 - காலை 6 மணி வரை | கச்சேரி, கனகரட்னம், பூங்கங்குளம், அரியாலை உப்புக்குளம்; |
| புதன்கிழமை 17-12-86 றும் சனிக்கிழமை 20-12-86 றும் | ,, ,, | நல்லூர், வைமன், பலாலி; |
| வியாழக்கிழமை 18-12-86றும் ஞாயிற்றுக்கிழமை 21-12-86றும் | ,, ,, | மடம், குருநகர், சீனோர் பாஷையூர், வீடமைப்புத் திட்டம. |

எனவே. பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசெளகரியங்களை மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சீ. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர், யா. ம. ச.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

A 3339

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
17 12 86 புதன்கிழமை

## தமிழீழ கிராம நீதிமன்றங்களில்:

# "ஏழை மக்களின் நன்மைகருதியே கட்டணம் அறவிடப்படுவதில்லை"

வல்வெட்டித்துறை, செவ் "தமிழீழ கிராம நீதிமன்றுகளில் வழக்குகள் தாக்கல் செய்வதற்கு கட்டணம் அறவிடாதது பற்றி பலர் காரணம் கேட்கிறார்கள். உண்மையில் நாளாந்தம் பத்து ரூபாவுக்கு குறைந்து உழைக்கும் ஏழை தனதுகுறைகளுக்கு நீதிகேட்க கட்டணம் செலுத்தமுடியாத நிலையிலுள்ளார்கள். அப்படியான நிலையிலுள்ளவர்களின் நன்மைகளைக் கருதிக் கொண்டே நாம் கட்டணம் அறவிடுவதில்லை."

இவ்வாறு நெல்லியடி வடமராட்சி பிரிவிலுள்ள சகல தமிழீழ கிராமநீதிமன்றுகளில் விசாரணையாளர் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் போது தலைமை வகித்துப்பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் வடபராந்திய தளபதி திரு கிட்டு கூறினார்.

வடமராட்சிப் பிரிவுகளிலுள்ள தமிழீழ நீதிமன்றுகளின் 400க்கு மேற்பட்ட விசாரணையாளர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில் திரு. கிட்டு மேலும் கூறியதாவது:

"இன்று சில இடங்களில் ஊர்மக்களால் கிராம சபைகளால் நடாத்தப்பட்டுவரும் இணக்கசபைகள் பஞ்சாயத்து சபைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. நாம் அறநெறை தடைசெய்யவில்லை; எம்மால் இயக்கப்பட்டுவரும் தமிழீழ கிராமநீதிமன்றுகளில் வழங்கப்படும் நீதியான தீர்ப்புகள் மக்கள் மனதில் நல்லவை என்றுபடும் பட்சத்தில் மக்கள்எம்மிடமே வருவார்கள். கிராமங்களிலுள்ள சமாதான சபைகளில் ஒரு பக்க சார்பான நீதி வழங்கப்படுவதும், ஊழல்கள் நிறைந்து காணப்படுவதாலேயுமே மக்கள் எம்மிடம் நீதி கேட்கவருகின்றார்கள்.

"எம்மால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினர் நீதி நேர்மை கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றைக் கடைப்பிடிப்பார்கள் என்றநம்பிக்கை எமக்குப் பரிபூரணமாக உண்டு. அதேவேளை நீதிமன்றுகளை அவமதிப்பவர்கள், ஆணைகளை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதேவேளை தற்செயலாக இவ் உறுப்பினர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் தக்க பாதுகாப்பு அளிப்பதற்கும் சித்தமாயுள்ளோம்." [எ]

## முஸ்லிம் கடற்றொழிலாளி சூட்டுக்குப் பலி

ஊர்காவற்றுறை செவ் கரையோரங்களில் வலைவீசி அன்றாடம் சீவியம் செய்து வந்த முஸ்லிம் கடற்றொழிலாளர் ஆஸ்மயில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்

இவர் புத்தளத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் நீண்ட காலமாக ஊர்காவற்றுறையில் வசித்து வந்தவர் இவரது மனைவி மத்தியகிழக்கு நாடொன்றில் வேலை செய்கின்றார்

கடந்ததிங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில்குடல்வெளியே தள்ளப்பட்ட நிலையிலிருந்த இஸ்மயிலை தமிழீழ விடுதலைப் புலிகள் ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள். [எ]

## சவூதியில் பாராட்டுப்பெற்ற இரு தமிழ் இளைஞர்கள்

(சவூதியில் இருந்து எம். சுரேந்திரன்)

சவூதி அரேபியாவில் உள்ள அல் ஹஜ் என்ற இடத்தில் சுகாதார அமைச்சு ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் இரு வடபகுதி தமிழ் இளைஞர்களை அவர்களின் நிர்வாகம் பாராட்டி கௌரவித்துள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. கே. குகநேசன், இணுவிலைச் சேர்ந்த திரு. அன்பழகன் ஆகிய இருவருமே இவ்வாறு பாராட்டப்பட்டவர்களாவர் இவர்களுக்கு பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டன:

இக்கம்பனி நிர்வாக முகாமையாளர் திரு. ஜோனகம் இருவரது சேவைகளையும், கடமை உணர்வையும் பாராட்டினார்:

இக்கம்பனி உயர் அதிகாரியாக கடமையாற்றும் சித்தங்கேணியைச் சேர்ந்த திரு ஜெகநேசன் இளைஞர்கள் சார்பில் நன்றி கூறினார்.

இந்த ஆஸ்பத்திரியில் யாழ்ப்பாண இளைஞர்கள் பலர் பல்வேறு பதவிகளில் பணியாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது:

## மறியல்போராட்டம்

யாழ்ப்பாணம், புதன்

"அடைவு நகைகளை உரியவர்களுக்கு மீளளிப்பதற்கு வங்கி நிர்வாகம் உறுதியான நடவடிக்கை எடுக்கும்வரை வடமகுதிமக்கள் வங்கிக் கிளைகள் அனைத்து முன்பாகவும் நாளை தொடக்கம் காலவரையற்ற மறியல் போராட்டம் மேற்கொள்ளப்படும்"

இவ்வாறு அடகு வைத்தோர்சங்கம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் அந்தந்தப்பகுதி மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக காலை 7 மணிமுதல் மறியல் போராட்டத்தில் ஈடுபடும்படியும், அனைவரையும் ஒத்துழைப்பு வழங்கும்படியும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. [எ]

## இல கம்யூனிஸ்ட் கட்சி குழுவினர் இன்று பீக்கிங் பயணம்

(கொழும்பு)

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பை ஏற்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவினர் இன்று பீக்கிங்கிற்கு விமான மூலம் செல்வுள்ளனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கட்சித் தலைவர் திரு பீட்டர்கெனமன், கட்சியின் சர்வதேச செயலாளரும், கலவானத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு டி. ஈ. டபிள்யூ. குணசேகரா, கட்சியின் அரசியற்குழு உறுப்பினரும், யாழ் மவட்டச் செயலாளருமான திரு பொன் குமாரசாமி ஆகியோர் செல்கின்றனர்.

இரண்டு வாரங்கள் அங்கு தங்கி உயர்மட்டத் தலைவர்களுடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவர்.

## களுகங்கை நீரை தென்னிந்தியாவுக்கு வழங்கவும்

### — பாராளுமன்றத்தில் கம்பஹா எம். பி.

கொழும்பு நிருபர்

"களுகங்கை நீரைக் குழாய் மூலம் மேற்குக் கரையோரமாக மன்னாருக்குக் கொண்டு செல்லவேண்டும் அங்கிருந்து தென்னிந்தியாவில் பயிர்ச் செய்கைக்கு நன்நீரை வழங்க வேண்டும் இத்திட்டத்தின் மூலம் அந்நிய செலாவணியைச் சம்பாதிப்பதுடன் இந்தியாவுடனான நல்லெண்ணத்தையும் வளர்க்கமுடியும்"

இவ்வாறு கம்பஹா எம்.பி.யான திரு. எஸ் டி பண்டாரநாயக்கா (சுதந்திரக் கட்சி) நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். மகாவலி அபிவிருத்தி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "மாங்குளம் பிரதேசத்திலுள்ள நிலத்தில் பெரும்பாலானவை வளம் நிறைந்தவை எனவே மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தை மாங்குளம்வரை விஸ்தரித்து அப்பகுதிக்கு நன்நீரை வழங்க வேண்டும். இதன்மூலம் விரயமாகும் நீரைப் பயன்படுத்தலாம்". [கூ.ஊ,

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குழு இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான மேலதிக பேச்சுவார்த்தைகளை நடத்துமுகமாக இன்றுகொழும்புவரவுள்ளது,

இணையமைச்சர்குழு நேற்று முன்தினம் சென்னையில் தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் நேற்று புதுடில்லி திரும்பி பிரதமர் ராஜீவுடன் ஆலோசனை நடத்தியிருந்தது. சென்னைப் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லையாயினும் எதிர்பார்த்தளவு இவை வெற்றிபெறவில்லை எனத் தெரியவருகிறது

இன்று கொழும்புவரும் இந்தியக்குழு முதலில் ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் தனியாகவும் பின்னர் அமைச்சர்கள் லலித். காமினி திஸநாயக்கா ரொனி டி மெல், ஜனுப் ஏ ஸி, எஸ். ஹமீட் ஆகியோர் அடங்கிய குழுவுடனும்பேச்சுநடத்துவரென எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன் இவர்கள் சென்னையில் தமிழ்ப்போராளிகளும் கூட்டணிப் பிரதிநிதிகளும் தெரிவித்தயோசனைகளையும் இலங்கை அரசிடம்சமர்ப்பிப்பர் எனவும் தெரியவருகிறது

இதேவேளை இன்று கொழும்புவரும் இந்திய குழுவைத்தாம் வரவேற்பதாக இந்தியத் தூதர் டிக்ஸிற்றிடம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். [ஊ]

## சுமுகமாக நடைபெற்ற பரீட்சை

யாழ்ப்பாணம், செவ்

அண்மையில் நடைபெற்று முடிந்த க பொ த. சாதாரணப் பரீட்சை எந்தவிதமான இடைஞ்சல்களுமின்றி சுமுகமாக நடைபெற்றதாகவும் இதற்கு உதவிய அனைவர்க்கும் நன்றி கூறுவதாகவும் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். [வா]

## புதிய மாணவர் அனுமதிபரீட்சை

உரும்பிராய் செவ்.

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியின் 7ம் ஆண்டுக்கான (தரம் 6) புதிய மாணவர் அனுமதிப் பரீட்சை 9ம் திகதி நடைபெறவுள்ளது இப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப்பெறும்முதல் 3 மாணவர்களுக்குக் கல்லூரியினால் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இக்கல்லூரியின் தொழில்நுட்பப் பிரிவு கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் கோரப்படவுள்ளன. இவ்வாண்டு இத்தொழில்நுட்பப் பிரிவில் இருந்து வானொலி பேணல், மின் இணைப்பு, ஒட்டு வேலை, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல் பயிற்சிகளை 150க்கு அதிகமான மாணவர்கள் பெற்றனர். (எ)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு ஆறுமுகம்

காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த திரு. கந்தப்பு ஆறுமுகம் (மலேயன் பென்ஷனர்) 16-12-86-ல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17-12-86) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

ஆ. இராசநாயகம்,
சக்கலாவோடை, காரைநகர்.

[C 6423]

### கிருஷ்ணபிள்ளை சிவசோதி

கட்டுடையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவசோதி காலமாகிவிட்டார். இவர் (சிவகௌரி அச்சக உரிமையாளரும்) காலஞ்சென்ற நாகபூசத்தின் அன்புக் கணவரும், நாகசோதி, Dr சிவராணி (மாத்தளை அரசினர் வைத்தியசாலை), கௌரி, ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அவரது இல்லத்திலிருந்து 17-12-86 புதன்கிழமை (இன்று) பி.ப. இரண்டுமணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
இ. ஞானப்பிரகாசம்.

[C-6413]

### திரு. வேலுப்பிள்ளை பெருமையினர்

கரணவாய் வடக்கு, வே. பெருமையினர் (இளைப்பாறிய தபாலதிபர்) 16-12 86 அன்று சிவபதமடைந்துவிட்டார் இவர் சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், பாலசுப்பிரமணியம் (தபாலதிபர்), மனோன்மணி, கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கத்தின் அன்புச் சகோதரரும், பவானி, சங்கரப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளிதரன், சுதாகரன், ரஜனி, பாலநளினி, பாலஜெயந்தன், ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C 6403)

### செல்லையா செல்லம்மா

காலஞ்சென்ற சிங்கப்பூர் செல்லையா அவர்களின் அன்புமனைவி செல்லம்மா காலமானார். அன்னார் சரஸ்வதி, சண்முகநாதன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், நெடுஞ்சாலைகள் திணைக்களம்), தங்கமணி, சேந்திநாதன் (முகாமையாளர் International Hard Ware Stores கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், பொ. சுயம்புலிங்கநாதன் ஓய்வுபெற்ற விற்பனை முகாமையாளர், St. antheny's Consolidated), குணரட்னம் (ஓய்வுபெற்ற யாழ்/பிராந்திய-மேற்பார்வை சுகாதார பரிசோதகர்), லோகாம்பிகை, செல்வநாயகி ஆகியோரின் மாமியாருமாவார். ஈமக்கிரியைகள் 17ம் திகதி புதன்கிழமை (இன்று) காலை 10 மணியளவில் நல்லூர் செம்மணி வீதியிலுள்ள 111ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நல்லூர் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
C. Shanmuganathan.

C 6416

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49 Telegrame Eelanadu
Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org